பதிப்புச் செம்மல்

டாக்டர் ச. மெய்யப்பன்

பேராசிரியர் மது. ச. விமலானந்தம்

பதிப்பளிப்பு

பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்

சென்னை - 24

பதிப்புச் செம்மல்
டாக்டர் ச. மெய்யப்பன்

மது.ச. விமலானந்தம்

கல்வி

புதுக்கோட்டை மாவட்டத்திற்குப் பத்திரிகைகளும் புத்தகங்களும் வெளியிடுவதில் சிறப்பான இடம் உண்டு. அதிலும் இராமச்சந்திரபுரத்தில் சுத்தானந்தபாரதி நூல்களை வெளியிட்ட அன்புநிலையம், பாவேந்தர் பாரதி தாசன் நூல்களை வெளியிட்டுவரும் செந்தமிழ் நிலையம், பாப்பா, பாப்பா மலர் பத்திரிகைகளை அச்சிட்ட பழம் பெரும் அச்சகமாகிய மதராஸ் ரிப்பன் பிரஸ் செழித்து வளர்ந்த ஊரில் தமிழ்ப் புத்தக உலகம் சிறப்பெய்தும் முறையில் பல சாதனைகள் செய்த ச.மெய்யப்பன் 1933-இல் நாட்டுத் துறவியாய், இல்லற ஞானியாய் வாழும் தவத்திரு சண்முகனார் - மீனாட்சி ஆச்சி இவர்களின் தவப் புதல்வராய்த்தோன்றினார்.சொந்தஊரில்பள்ளிப்படிப்பை முடித்த இவர், கலைத்தந்தை கருமுத்து தியாகராசர் நிறுவிய முதல்தர பள்ளியாகிய விசாலாட்சி கலாசாலை யில் பள்ளியிறுதி வகுப்புவரை பயின்று தேர்ச்சிபெற்றார். கோடி கொடுத்த கொடைஞர் அழகப்பா கல்லூரியில் இடைநிலைக்கல்வியைப் பயின்று முடித்தார். தமிழிசைக் காவலர் அண்ணாமலையரசர் அமைத்த அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் முதுகலை வகுப்பில் பயின்று முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்.

பணி

பெருமைமிகு அப்பல்கலைக்கழகத்தில் 1957 இல் பணியில் அமர்ந்தார். கவிஞர் மு. அண்ணாமலை, சிற்பி பாலசுப்பிரமணியம் தொடர்பால் தமிழ் வட்டம் விரிந்தது. அடிநாள்தொட்டு தமிழ்ப்புத்தகங்களை வாங்கிக்

30.6.90-ல் சின்னாளப்பட்டி சன்மார்க்கச் சங்கம் நடத்திய பாராட்டு விழாவில் வழங்கப்பெற்றது.

குவிப்பார். கல்லூரி நாட்களிலே 'முத்தமிழ்' என்ற கையெழுத்து ஏட்டினை நடத்தினார். பல்கலைக்கழகப் பணியும், பல அறிஞர் தொடர்பும் பலதுறை அறிவும் புத்தக உணர்வுபெற உதவியது. அனைத்துத் துறைகளிலும் நடைபெறும் சிறப்புச் சொற்பொழிவுகளைக் கேட்டுக் கேள்விச் செல்வராக வளர்ந்தார். முதன்முதலாகக் காங்கிரசு மாநாடு சென்னைக்கருகிலுள்ள ஆவடியில் நடந்தபோது சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பாரிநிலையங்களோடு தொடர்பு கொண்டார். பாரதிதாசன், சோமசுந்தர பாரதியார், மு.வரதராசனார் கலந்து கொள்ளும் இலக்கிய விழாக்களில் தலைமைத் தொண்டராக விளங்குவார். பாவாணர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய காலத்தில் அவரோடு கலந்து பழகி தமிழின் அடிப்படை ஆற்றல்களை நன்குணர்ந்தார். வேர்ச்சொல் ஆராய்ச்சியில் விருப்பம் கொண்டார்.

பதிப்பாசிரியர்

பல்கலைக்கழகத்தில் போதக ஆசிரியராய் நூலாசிரியராய் விளங்கும் இவர் 1960-இல் சிறந்த பதிப்பாசிரியராகவும் விளங்கினார். இவர் பதிப்பித்த நூல்கள் கடந்த 30 ஆண்டுகளாகப் பல்வேறு பரிசுகளைப் பெற்று வருகின்றன. இவர் எழுதிய 'தாகூர்' என்ற நூலுக்குத் தமிழக அரசு முதல்பரிசு வழங்கிச் சிறப்பித்தது. துறைதோறும் தமிழுக்குப் புதிய நூல்கள் வெளியிடவேண்டும் என்ற வேணவாக் கொண்டவர். நாளும் வெளிவரும் நல்ல நூல்களைக் காண்பவர்; கற்பவர். வளர்ந்துவரும் அச்சுக் கலையின் பயன்பாடு அனைத்தையும் பயன்படுத்தித் தமிழ் நூல்களைப் புதியவடிவில் புதிய வண்ணத்தில் கொண்டு வருவதில் இவர் வெற்றி பெற்றுள்ளார். உண்ணாதிருப்பார்; உறங்காதிருப்பார்; பேசாதும் இருப்பார். ஆனால், தமிழ்நூல்பற்றி நினையாது இரார். இவர் முயற்சியில் உருவான ஒவ்வொரு நூலும் ஏதேனும் ஒரு வகையில் சிறப்புப் பெற்றே விளங்கும்.

இவர் நூலுக்குரிய பொருட்களைத் தேர்ந்து ஆசிரியர்களைக் கண்டுபிடித்து, திட்டம்வகுத்து மிகச்சிறந்த நூல்கள் பலவற்றை உருவாக்கிய திறத்தைத் தமிழ்ப் புத்தக உலகம் நன்கு அறியும்.

சில துறைகளில் முதன்முதலாக நூல் வெளியிட்ட பெருமை இவரைச் சாரும். சுற்றுலா வளர்ச்சி, சிற்றிலக்கியப் பேராய்வு, நாட்டுப்புறவியல், மக்கள் செய்தித் தொடர்பு இயல்.

புதிய எழுத்தாளர்களை அறிமுகம் செய்த பெருமை இவர்க்கு உண்டு. செம்பதிப்பு வரிசை என்ற அமைப்பில் வள்ளலார் பாடல்கள், பாரதியார் கவிதைகள், விவேக சிந்தாமணி, பட்டினத்தார் பாடல்கள், நாலடியார், நால்வர் நான்மணிமாலை முதலிய நூல்களை மிக நல்லதாளில் புதிதாக வார்க்கப்பெற்ற அச்சில் மிகச்சிறப்பாக அச்சிட்டு, பல பதிப்புக்களை வெளிக்கொணர்ந்தார். இவர் வெளியிட்ட 'வெற்றிச் சிந்தனைகள்' கையடக்கப் பதிப்பாக பல நூறு ஆயிரம் படிகள் வெளிவந்து எல்லோர் பைகளிலும் அழகு செய்வதோடு அவர்களைச் சிந்திக்கவும் செயல்படவும் தூண்டுகிறது.

இவரது பதிப்புத்திறனைப் பழம்பெரும் பதிப்பாளர்களே பாராட்டுகின்றனர். பல்கலைக்கழகங்கள் மதித்துப் போற்றிப் பதிப்புக்குழுவில்சிறப்பு உறுப்பினராக்கி உள்ளன. தில்லைநாயகம் அவர்களின் 'இந்திய வேளாண்மை, 'இந்திய அரசியலமைப்பு' 'இந்தியத் தொழில்வளம்', டாக்டர் சு.சக்திவேல் அவர்களின் 'தமிழ்மொழி வரலாறு' 'நாட்டுப்புறவியல் ஆய்வு', 'நூறு ஆண்டுத் தமிழ் உரை நடை', டாக்டர் மோகன் அவர்களின் 'நாவல் வளர்ச்சி', மு.வை. அரவிந்தனின் 'உரையாசிரியர்கள்', சுந்தர சண்முகனாரின் 'தமிழ்நூல் தொகுப்புக் களஞ்சியம்', ரா.கி. ரங்கராசனின் 'பட்டாம்பூச்சி' முதலிய பெருநூல்களை வெளிக்கொணர்ந்ததை எண்ணி நாளும்பூரிக்கிறார்.

1. சிற்றிலக்கிய வரிசை
2. உலகநூல் வரிசை
3. திருக்குறள் வரிசை
4. நாட்டுப்புறவியல் வரிசை
5. மொழியியல் வரிசை
6. திருக்கோயில் வரிசை
7. பாடநுண்பதிப்பு வரிசை
8. வள்ளலார் வரிசை
9. அகராதிகள் வரிசை

இவ்வரிசை நூற்கள் இவரது தனித்தன்மை வாய்ந்த வெளியீட்டுத் திறத்திற்குக் கட்டியம் கூறுகின்றன.

ஆக்சுபோர்டு, மாக்மில்லன் நிறுவனங்கள் போல, நல்ல நூல்களையே வெளியிடுவது, சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு எழுதச் செய்வது; அழகிய செம்பதிப்பாகக் கொணர்வது இவரது நோக்கம்.

புதியதோர் உலகுசெய்ய இவர் வெளியிடும் நூல்கள் துணை நிற்பதாக இவர் பெருமிதம் கொள்கிறார். அதிக ஆய்வு நூல்களை வெளியிட்டுவரும் இவர், பொதுமக்களுக் கென எளிய நூல்கள் பல வெளியிட்டுத் தமிழரின் படிக்குந் திறன், கல்வித்தரம் வளர, உயர நாளும் உழைக்கிறார். பயனற்ற நூல்களை வெளியிட்டுக் காலத்தைக் கழிக்காமல் பயனுள்ள நூல்கள் 400க்குமேல் வெளியிட்டு இன்று நாடு போற்றும் பதிப்புச்செம்மல் ஆக, பதிப்புச்சுடராக ஒளி வீசுகிறார்.

இவர்தம் அறிவாற்றலும் செயல்திறனும் சுறுசுறுப்பும் விடாமுயற்சியும் அயரா உழைப்பும் தமிழ்ப் புத்தக உலகிற்கு வளம்சேர்த்துள்ளன என்பது வாசகர் மதிப்பீடு. இவர் படைத்த புதிய உத்திகளை வளரும் பதிப்பாளர் பின்பற்றுவது இவருக்குப் பெருமை அளிக்கிறது. புதுமை காண்பதிலும் புதுமை புகுத்துவதிலும் வல்லவரான இவர்-

தம் பதிப்புக்கள் புதுமைப் பொலிவுடன் திகழ்வதில் வியப்பில்லை.

பல்கலைக் கழகத்தில் பணிசெய்யும் வாய்ப்புப்பெற்றதால் நாளும் வளர்ந்து வரும் அறிவியல் நுட்பங்கள், கலை, இலக்கிய மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் கருத்தில் கொண்டு இவர் எழுதியுள்ள ஆராய்ச்சிப் பதிப்புரைகள் தனிநூலாகும் தகுதி பெற்றன. பதிப்புரை இலக்கியத்திற்கு வளம்சேர்த்தவர்களில் இவர் முதல் வரிசையர். நூலுக்கு நுழைவாயிலாய், வழிகாட்டியாய், மதிப்புரையாய் இவர்தம் பதிப்புரைகள் பட்டொளிவீசித் திகழ்கின்றன.

பலநூல்கள் பதிப்பித்தும், பலபெரியோர் பிர
சங்கம் பண்ணுவித்தும்
நலமுடைய கலாசாலை புத்தகசாலை பலவும்
நாட்டி யுந்தங்
குலமுயர நகருயர நாடுயர வுழைக்கின்றார்,
கோடி மேன்மை.
நிலவுறஇச் சங்கத்தார் பல்லூழி வாழ்ந்தொளிர்க.
நிலத்தின் மீதே!

பாரதியார் தனவணிகப் பெருமக்களைப் பற்றி 1918ல் புகழ்ந்து பாடிய நற்செயல்கள் நற்குணங்கள் அனைத்திற்கும் நல்லதோர் எடுத்துக்காட்டாய் பேராசிரியர் மெய்யப்பன் திகழ்கிறார்.

நல்லாசிரியர்:

பாடம் நடத்துவதில் தனித்திறம் சான்றவர். தெளிவுற அறிந்திடுதல். தெளிவுதர மொழிந்திடுதல். மாணவர் உள்ளத்தில் களிவர ஆனந்தக்கனவு பல காட்டல் இவர் இயல்பு. எதனையும் தெளிவாகவும் எளிமையாகவும் விளக்கவல்லவர். புதுயுகத்திற்கான புதிய செய்திகளை நாளும் தரும் நல்லாசிரியர். பாரதிக்குப்பின் தோன்றிய

இலக்கியத்தில் பயிற்சியும் தேர்ச்சியும் மிக்கவராதலால் கண்ணதாசன் முதல் வைரமுத்துவரை நாளும் தோன்றும் நவகவிதைகளை மாணவர்களுக்கு அறிமுகம் செய்து வளரும் தமிழை வளர்ப்பவர். பாடல்களை தான் ஈடு பட்டுச் சுவைத்து மகிழ்ந்து மாணவர்களும் ஈடுபட்டுச் சுவைத்து மகிழும்படி நடத்துவது இவர் இயல்பு. மொழிப் பற்றையும் மொழித்திறனையும் வளர்ப்பவர். சொல்லும் திறன் விளக்குந்திறன் வல்லவராதலால் கேட்பவர் உள்ளத் தில் கருத்துக்கள் பசுமரத்தாணி போல் பதியும். வாய்மை, தியாகம், சான்றாண்மை முதலிய தலைமைப் பண்புகள் அமைந்த வாழிகாட்டுதலில் வல்லமை வாய்ந்தவர். முப்பது ஆண்டுகளாக மாணவர்கள் மதித்துப் போற்றும் ஆசிரியராய் ஆசிரியப் பணியைச் சிறப்பாகச் செய்து வருகிறார். எழுத்தும் பேச்சும், நூலும் பதிப்பும் புதுநெறி காட்டுபவை. இவர் வுகுப்புக்களில் தமிழ்களி நடம் புரியக் காணலாம். சமூகக் கடமையுணர்வுடன் ஆய்வு வேட்கை யுடன் கற்பித்தலில் புதிய உத்திகள் மூலம் மாணவர்க்கு விழிப்புணர்ச்சி ஊட்டும் வித்தகர். புகழ்மிக்க பல்கலைக் கழகத்தில் பல்லாயிரம் மாணவர்களுக்குத் தமிழ் பயிற்று வித்து அவர்களது நெஞ்சங்களில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர்பாணியில் பாடம் நடத்தும் பலபேராசிரியர்கள் தோன்றியுள்ளது இவர்தம் பெருமைக்குச் சான்றாகும்.

அறக்கட்டளைகள்

இவர் தாம் பயின்று பணிசெய்கின்ற அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் முதல் அறக்கட்டளை நிறுவினார்.

1. சண்முகனார் மெய்யப்பன் அறக்கட்டளை–அண்ணா மலைப் பல்கலைக்கழகம்.
2. மூதறிஞர் வ.சுப. நிதியம்–அண்ணாமலைப்பல்கலைக் கழகம்.

3. மாணிக்கம், மெய்யப்பன் அறக்கட்டளை - புதுவைப் பல்கலைக்கழகம்.
4. மெய்யப்பன் அறக்கட்டளை – தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
5. மெய்யப்பன் அறக்கட்டளை – திருவேங்கடவன் பல்கலைக்கழகம், திருப்பதி.
6. பிருந்தாவன் கல்விக்கழகம், கோயம்புத்தூர்.
7. நகரவிடுதிக் கட்டிட நிதி, மதுரை.
8. மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை.
9. மேலைச்சிவபுரி திருக்குறள் கழகம்.
10. தமிழ் எழுத்தாளர் நலநிதி.

உரையாடல் கலையில் வல்லவர்

பிறர் பேச்சைச் செவிகொடுத்துக் கேட்பார். அவர் மனங்கொள எடுத்துச் சொல்லுவார். பேச்சு ஒருவழித் திறமல்ல; கருத்துக்களைத் தெளிவாக அழுத்தமாகக் கூறுவார்; பகுத்தும் வகுத்தும்கூறுவார்; உணர்ந்து சொல்லு வார்; உணர்ச்சி வயப்படமாட்டார்; மற்றவர்களைப் புரிந்து கொண்டு பேசுவார்; பட்டறிவு மிக்கவராதலால் அனுபவஒளிக்கதிர்கள் பளிச்சிடும். நெஞ்சம் திறந்த பேச்சு, வஞ்சகமில்லாப் பேச்சு. பல்துறை அறிவு இருப்பதால் உரையாடலில் பல்வகை நலங்கள் பளிச்சிடும். வெறும் பேச்சும் வெட்டிப் பேச்சும் இவர் விரும்பாத ஒன்று. இவர் உரை அன்புரை, மகிழ்வுரை நெகிழ்ச்சி உரை, கனிவும் பணிவும் கலந்த நல்லுரை. இவரது உரையாடலிலுள்ள வசீகரத் தன்மையும் ஈர்ப்புத் தன்மையும் பல நூறு நண்பர்களைத் தேடிக் கொடுத்துள்ளது. உரையாடலில் நயத்தக்க நனி நாகரிகர்–சந்தித்த பெரிய மனிதர்களையும் தேதிகளையும் சேதிகளையும் பழக்க வழக்கங்களையும் பழகுதமிழில் நகைச்சுவையுடன் பேசுவார். இவர் இருக்கு மிடம் மகிழ்ச்சி இருக்குமிடம். இவர்தம் கூட்டுறவு நா உறவு

சிறந்த சொற்பொழிவாளர்

அவையோரை ஈர்க்கும் பேச்சு; அவையறிந்து பேசுவார்; சிந்தித்துப் பேசுவார்; சிரிக்கப் பேசுவார். அனுபவ முத்திரை பேச்சில் பளிச்சிடும். குறைந்த நேரத்தில் நிறைந்த கருத்து; உணர்ச்சியான பேச்சு; உண்மையான பேச்சு, தெளிவான பேச்சு; தேர்ந்த சொற்களையே பயன் படுத்துவார். பயனறிந்த சொற்களையே உரைப்பர். பயனில்லாச் சொற்களைத் தவிர்ப்பர். பல சொல்லக் காமுறு மாட்டார். சில சொல்லில் விளக்கிவிடுவார். கேட்பார்ப் பிணிக்கும் பேச்சு; நாடக உத்தியில் பேச்சைத் தொடங்கி முடிப்பார். பெரும் பேச்சாளி இல்லை. ஆனால், அனைவரும் விரும்பும் பேச்சாளர்.

கொடைஞர்

சிதம்பரத்தில் அறப்பணி, திருப்பணிகளுக்கு நன்கொடை பெறுவோர் முதன்முதல் வருமிடம் மெய்யப்பன் இல்லம்தான்! நாள்தோறும் செய்யும் நல்லறங்கள் கணக்கிலடங்கா. ஈட்டும் போதே கொடுத்துப் பழகியவர். வள்ளுவர் சொல்லும் ஈத்துவக்கும் இன்பத்தை நாளும் துய்ப்பவர். சுற்றத்தார்க்கும் பணியாளர்க்கும் இவர் செய்யும் உதவிகள் எண்ணிலடங்கா. நினைத்ததும் கொடுப்பவர். காலம் தாழ்த்தாது வழங்குபவர். வாக்குறுதி அளித்த தொகைகளை விரைவில் வழங்குபவர். இவரது உதவிநாடி வந்தவர்கள் வெறுங்கையோடு திரும்பியதில்லை. காட்சிக்கு எளியவராய் இருப்பதால் அணுகுவதும் உதவிபெறுவதும் மிக எளிதாக உள்ளது. நாளை என்பது இல்லை. முடிந்ததை உடனுக்குடன் உதவுவதால் உதவிபெறுவோர் உளம் உவப்பர். பொருள் கொடையோடு இவரது நூல்கொடை தனிச்சிறப்பு உடையது. நூற்றுக்கு மேற்பட்ட திருமண விழாக்களில் இலக்கிய விழாக்களில் பயன்மிகு நூல்களை அன்பளிப்பாக வழங்கி மகிழ்வது இவரது இயல்பாகும். வெற்றிச் சிந்தனைகள்

1 இலட்சம் பிரதிகள், புதிய ஆத்திசூடி 10,000 பிரதிகள், பட்டினத்தார் 10,000 பிரதிகள், வெற்றி வழிபாட்டு மலர் 50,000 பிரதிகள், புதிய தமிழகத்தை உருவாக்கி யோர் 15,000 பிரதிகள் 8, 16, 32 பக்க அளவில் துண்டுப் பிரசுரங்களை முதல் நாள் நினைத்து, மறுநாள் அச்சிட்டு விழா நடத்துமிடங்களில் அன்பளிப்பாக அள்ளிக் கொடுப் பார். நாடு, மொழி, இன, மக்கள் வாழ்க்கை, கல்வி, பொதுவாழ்வு பற்றி வழங்கிய துண்டுப் பிரசுரங்கள், சிறு வெளியீடுகள் ஏராளம் ஏராளம்.

இயல்பு

பள்ளியில் பயின்ற காலத்திலேயே மாணவர் தலைவ ராக இருந்தார். எவரோடும் எளிதில் பழகிவிடுவார். இன் மொழிகளால் எவரையும் எளிதில் ஈர்த்துவிடுவார். மக்கள் தொடர்பு இவருக்குக் கைவந்த கலை. இவர் எல்லாப் பொதுநிகழ்ச்சிகளிலும் மிகுந்த ஆர்வத்தோடு ஈடுபடுவார். தமிழ்த்துறை விழா, பல்கலைக்கழக விழா, இவர் எடுக்கும் இலக்கிய விழாக்கள் ஈடுபாட்டுடன் செய்து மகிழ்வார். சிதம்பரத்தில் குறித்த நேரத்தில் கலையழகுடன் பல விழாக்களை எடுத்துப் பொது நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடத்துவார்.

பல அறிஞர்களோடு நெடுநாட்களாகத் தொடர்பு கொண்டிருப்பதால் விழா நடத்துவது இவருக்கு எளிது. 'திங்களொரு விழா எனத் தமிழறிஞர் பெரு மக்களை வரவழைத்து விழா எடுப்பார். அண்ணாமலைப் பல்கலைக்கழகப் வெள்ளிவிழா, பொன்விழா, வைர விழா, அரசர் நூற்றாண்டுவிழா அனைத்திலும் ஈடுபாட்டுடனும் உற்சாகத்துடனும் கலந்து கொண்டு, பல்கலைக்கழகப் புகழ்பரப்பும் சிறு நூல்களை அச்சிட்டு வழங்கி மகிழ்வார்.

இவர் விழாக்களுக்குச் செல்வதிலும் அறிஞர்களைச் சந்திப்பதிலும் மாநாட்டில் கலந்து கொள்வதிலும். சோர்வுறுவதில்லை. தமிழ்நாட்டில் நடைபெறும் இலக்கிய நிகழ்ச்சிகளில் இவர்பங்கு பெறுவார்; பங்களிப்பும் இருக்கும்

திருமுறை அம்பலம் ஏறல்

தில்லையம்பலத்தில் திருமுறை அம்பலம் ஏற்ற, மூதறிஞர் வ.சுப. மாணிக்கனாருக்கு உறுதுணையாக இருந்தார். பொதுவாகத் திருமுறைகளில் ஈடுபாடும் பயிற்சியும் மிக்கவராதலால் இலட்சிய வெறியோடு முயற்சி வெற்றி பெற அல்லும் பகலும் அயராது உழைத்தார். பல அறிக்கைகளை அச்சிட்டு வழங்கினார். பெரும்புலவர் முருகேசனார், தவத்திரு ஊரன் அடிகள், சிதம்பரம் மயில்வாகனன் இவர்களோடு இயக்கமாக நடத்தி, தில்லை நடராசப்பெருமான் குடமுழுக்குநாளில் பொன்னம்பலத்தில் திருமுறை பாடச் செய்ததை எண்ணி எண்ணி எப்போதும் மகிழ்வார். திருக்கோயில் வழிபாட்டில் அம்பலத்தில் திருமுறைகளும் ஓதப் பெறுவதில் மக்கள் ஈடுபட்டுக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்குவதைக் கண்டு உளம் மகிழ்வார். திருக்கோயில் தோறும்திருமுறை ஓதப்பெறும் நாள் எந்நாளோ? என ஏங்கித் தவங்கிடப்பவர்.

தமிழ்வழிக் கல்வி

தமிழ்வழிக் கல்வி தமிழ்நாட்டில் முதன்மையான பிரச்சனையாக உள்ளது. உணவுப்பிரச்சனை தீர்ந்துவிட்டது. தண்ணீர்ப் பிரச்சனையும் தீர்ந்து வருகிறது. காவிரி பிரச்சனை தீர்வு கையகத்தது. ஆனால், தமிழர்கள் எந்த மொழியில் கற்பது என்பதும் வேலைவாய்ப்புப் பெறுவது எப்படி என்பதும் தீராத பிரச்சனையாக உள்ளன. மூதறிஞர் வ சுப.மா. அவர்கள் இந்தச்சிக்கலில் அனைத்துக்கூறுகளையும் அலசி ஆராய்ந்து தெளிவான தீர்வு நல்கியுள்ளார். மாணிக்கனாரின் இயக்கத்திற்கு ஈரோடு வேலா. இராச மாணிக்கனார் தலைமை தாங்குகிறார். தமிழகம் தழுவிய அமைப்பாளர் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இவ்வியக்கத்திற்கு அனைத்து உதவிகளையும் மெய்யப்பனார் செய்து வருகிறார். அண்மையில் திருச்சியில் நடைபெற்ற தமிழ்

வழிக்கல்வி இயக்க மாநாட்டில், இயக்கம் வலிவு பெற இரண்டாயிரம் ரூபாய் நன்கொடை வழங்கினார்.

இத்திட்டம் வெற்றிபெறத் தமிழ்ப்பேராசிரியர்கள், அறிஞர்கள்,சித்தனையாளர்களைக்கொண்டு சிறந்த செயல் திட்டம் வகுத்து நடைமுறைப்படுத்துவதற்கு நாளும் உழைத்து வருகிறார். இவ்வியக்கத்திற்கு மெய்யப்பன் அவர்கள் வித்தும் வேருமாய் விளங்குகிறார். திசைமாறிச் செல்லும் தமிழ் இளைஞர்களுக்கு ஒளிமயமான எதிர்காலத் திற்கு உத்திரவாதமளிக்க இவ்வியக்கத்தைத் தவிர வேறு கதியில்லை; வழியில்லை. மதுரை, சிதம்பரம், சென்னை, கோவை, திருச்சி முதலிய இடங்களில் நடந்த தமிழ்க்கல்வி இயக்க மாநாட்டிற்கு முத்தமிழ்க் காவலர், தமிழ்க்குடி மகன், இளவரசு, பொற்கோ முதலிய பெருமக்களுடன் தோளொடு தோள்நின்று ஒத்துழைப்பு நல்குகிறார். ஆரவாரமின்றி இவர் செய்துவரும் பல்வேறு பணிகளுக் கிடையில் தமிழ்வழி இயக்கம் தலைமை சான்றது. முதன்மையானது. இயக்கத்திற்கு அனைத்து வகைகளிலும் வலிமைசேர்த்துவருகிறார். இவ்வியக்கத்திற்குத் தடையாக விருப்பவற்றை அறிவியல் அணுகுமுறையில் ஆராய்ந்து விளக்கியுள்ளார். இவ்வியக்கவெற்றி தமிழரின் தனிப்பெரும் வெற்றி என இவர் கருதுகிறார்.

புதிய ஆத்திசூடி

புதிய ஆத்திசூடி 12, 1980 இல் கருத்துச் செலுத்தி னார். பாரதியார், பாரதிதாசன், வாணிதாசன், வ.சுப.மா. தமிழண்ணல், சஞ்சீவி, இளவரசு போன்றோரின் ஆத்திசூடி களை இணைத்து அச்சிட்டு அன்பளிப்பாக வழங்கினார். இவர் இயற்றிய ஆத்திசூடி இவர்தம் குறிக்கோளை, அற நெறிக் கோட்பாடுகளை, வாழ்க்கை நெறிகளை, கல்வி யியலை, அழகியல் உணர்வை, செந்தமிழ்ச் சிந்தனைகளை விளக்குகிறது. பழகுதமிழில் பாலர்கள் விரும்பும் வண்ணம் படைத்தளித்துள்ள திறம் வியந்து போற்றுதற்குரியது.

சிறிய தொடர்களால் அமைந்தது. உடல்நலம், உயிர்நலம், உளநலம் பற்றிய பொன்மொழிகளாகத் திகழ்கின்றன. வாழத் துடிக்கும் இளைஞர்களுக்கு வழிகாட்டி; கைவிளக்கு; கையடக்கப் பதிப்பாக மிகச்சிறந்த முறையில் பதினாயிரம் அச்சிட்டு வழங்கிப் புதிய ஆத்திசூடி புவியெங்கும் பரவ வழி செய்தவர். ஆத்திசூடி தொகுப்பு இவருக்குப் பேரும் புகழும் தந்தது.

தொகுப்பியலில் வல்லவர். எதனையும் பகுத்தும் தொகுத்தும் வழங்குவதில் சிறந்தவர். கருத்துக்களை, பொன்மொழிகளை, உவமைகளை, பழமொழிகளை, பல நூறு ஆயிரங்களாகத் தொகுத்து வைத்துள்ளார். செல்வத் தொகையினும் இலக்கியத் தொகையை எண்ணி இன்புறு பவர்; மகிழ்பவர்.

கருத்துப்பரவல் உத்திகளில் பல புதுமைகளை நாளும் செய்து வருபவர். எங்கே மக்கள் கூடுகின்றார்களோ அங்கெல்லாம் இவரது சிறுவெளியீடுகள் வழங்கப்பெறும். ஆரவாரமற்ற அமைதியான முறையில் மாற்றங்காண்பதற் கான மனங்களைத் தயார் செய்வதற்கு ஏற்ற வகையில் பல நூல் வெளியீடுகளைத் தொடர்ந்து வெளியிட்டு வரும் திறன் பாராட்டிற்குரியது.

1330 திருக்குறள்களில் எல்லோருக்கும் என்றும் பயன் படக்கூடிய 100 குறள்களுக்கு மிக எளிய உரை எழுதிப் பல்லாயிரம் படிகளை அச்சிட்டு வழங்கித் திருக்குறள் நெறி பரப்பும் நேர்மையர்.

சொல்லாய்வு

சொல்லாய்விலும் சொல்லாக்கத்திலும் தனித்திறம் சான்றவர். பாவாணர் கூட்டுறவும் மாணிக்கனார் நல்லுறவும் இளங்குமரனாரின் நட்பும் இவ்வழியில் இவரை ஊக்குவித்தன. நாளும் வழக்கில் வரும் புதிய சொற்களைத் தொகுத்துள்ளார். 'பழகுதமிழ்ச்சொற்கள் 10,000' எனப்

பகுத்து அமைத்துள்ளார். இவருடைய கட்டுரைகளிலும் சிறு வெளியீடுகளிலும் நூல்களிலும் நானூறுக்கு மேற்பட்ட பதிப்புரைகளிலும் புதுச்சொற்களை வழக்கிற்குக் கொண்டு வந்துள்ளார். நல்ல தமிழ்ச் சொற்களை வழக்கில் காணுந் தோறும் களிப்படைவார். புதிய சொல் படைப்பாளர்களை ஊக்குவிப்பார். 'மாணிக்கனார் சொல்லாக்கம்' என்ற நூலைத் தமிழில் முதன் முதலாக வெளியிட்ட பெருமை இவரைச் சாரும்.

டாக்டர் பட்ட ஆய்வு

முப்பது ஆண்டுகளாகப் புத்தக உலகில் உலவிவரும் இவர், தம் டாக்டர் பட்ட ஆய்விற்கு 'நூறு ஆண்டுகளில் தமிழ் நூல் பதிப்புமுறை' என்ற தலைப்பில் ஆராய்ந்து டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். சி.வை.தாமோதரம் பிள்ளை,ஆறுமுக நாவலர், உ.வே.சா,பவானந்தம் பிள்ளை எஸ்.வையாபுரிப் பிள்ளை, சைவ சித்தாந்த சமாஜம், கழகம் முதலியவற்றின் பதிப்புத்திறன்களை, நெறிகளை, கொள்கைகளை அலசி ஆராய்ந்துள்ளார். தமிழ்ப் பதிப்புக் களின் பரிணாம வளர்ச்சிகளை விளக்கியுள்ளார். வளர்ச்சி நிலைகளை, திருப்பு முனைகளை வரைபடமாக்கியுள்ளார். அறிஞர் பலரும் மதித்துப் போற்றும் ஆய்வேடாகத் திகழ்கின்றது. தாம் விரும்பி உழைக்கும் துறையில் ஆய்வை எடுத்துக் கொண்டதால், தமது பட்டறிவும் நூலறிவும் நுண்ணறிவும் தோன்ற ஆய்வேட்டைச் சிறந்த முறையில் அமைத்துள்ளார். பதிப்பாசிரியரின் பல்வேறு கடமை களையும் பொறுப்புக்களையும் விளக்கி, அவர்தம் சாதனைகளை நிறுவியுள்ளார். இந்த டாக்டர் பட்ட ஆய்வேடு பதிப்பாசிரியர்களைப் பற்றிய சிறந்த மதிப் பீடாகும். வளர்ந்து வரும் பதிப்பு உலகிற்கு வழிகாட்டும் கூறுகள் பல உள.

எளிய வாழ்வு

இயல்பாகவே ஆடம்பரமில்லாத பகட்டில்லாத வாழ்வு

இவரது வாழ்வு. உடை, உணவு எளிதாக இருக்கவேண்டும். முப்பது ஆண்டுகளாக எளிய வெள்ளைச் சட்டை தான். கரிய திருமேனியில் வெள்ளை உள்ளத்தின் வெளிப்படை யான அடையாளம். மிகுதியான பயணம் மேற்கொள்வ தால் உடைக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. உடலை மறைக்க உடை, வெப்ப தட்ப நிலைக்கேற்ப எளிய உடை. பல்கலைக் கழகத்தில் பணியாற்றுவதால் கோட்டு, டை போன்றவற்றில் மயக்கமில்லை. தமிழ் நாட்டுக்கேற்ற தமிழரை அடையாளம் காட்டக் கூடிய எளிய உடை. காந்தியத்தின் பாதிப்பால் எளிய ஆடையே அணிவர். கழுத்துச் சங்கிலியும் கையில் மோதிரமும் இவர் அணியாதவை. பணிவுடைமை, இன்சொல் இவருக்கு அணி கலன். நகையும் உவகையும் ஒப்பனை. பேருந்துகளிலும் புகைவண்டிகளிலும் பெரும்பகுதி செலவிடுவார். எளியவர் களோடு உறவாடுவதால் எளிமை இயல்பானது. நடை யாலும் உடையாலும் பட்டத்தாலும் பதவிகளாலும் இவர் எவரிடமிருந்தும் தன்னை அந்நியமாக்கிக் கொள்வ தில்லை. எது இயல்போ அது இவர் இயல்பு. செயற்கை இவருக்குப் பகை.

குறிக்கோள் வாழ்க்கை

நல்ல தாய் தந்தையரைக் கொண்ட இவர், அன்பான மனைவியையும் பெருமைப்படத் தக்க மக்கட் செல்வத்தை யும் உடையவர். வாழ்க்கையில் உயர்ந்த இலட்சியங் களை அடையப் பெருந்திட்டங்கள் வகுத்துச் செயல்பட்டு வருபவர். இலக்கு மட்டுமல்ல; வழியும் தூய்மையாக இருக்கவேண்டும் என்பர். குறி மட்டுமல்ல நெறியும் நேரியதாக இருக்கவேண்டும் என்பர்.

மிகச்சிறந்த பதிப்பாளராகத் திகழவேண்டும். மொழிப் பணி செய்யவேண்டும். தமிழ்இயக்கத்திற்கு உழைக்க வேண்டும். கற்றகல்வியை, குவித்த செல்வத்தைப் பலருக் கும் பயன்படச் செய்யவேண்டும். நல்லோர் உறவு,

பெரியோரைத் துணைக்கோடல், அறக்கட்டளைகளைத் தொடர்ந்து நிறுவுதல், நிறுவனங்களை உருவாக்கல் இவரது வாழ்க்கையின் குறிக்கோள்களாகும். சான்றோர்கள், சாதனையாளர் வாழ்க்கை வரலாறுகளை ஈடுபட்டுக் கற்று உணர்ந்து தேர்ந்தவராதலால் பணிகள் மூலமே பேரும் பெருமையும் அடையவேண்டும் என்ற குறிக்கோளை உடையவர். பேரறங்கள், பெருந்திட்டங்கள் பற்றியே நினைப்பார். விளம்பரப் புகழுக்காகச் சின்னஞ்சிறு செயல்களில் ஈடுபடமாட்டார்.

வ.சுப.மா. வழிபாடு

மூதறிஞர் வ.சுப.மா. அவர்களை ஐம்பதில் அறிந்திருந்தாலும் அறுபதுகளில் நூல்களைக் கற்றிருந்தாலும் எழுபதுகளில் அவரிடத்துப் பணி செய்த போதே அவரை நூற்றுக்கு நூறு இவரால்அறிய முடிந்தது. உணர முடிந்தது. எண்பதுகளில் தொண்டரானார். அவரது கொள்கைவழி நிற்கின்றார். ஜான்சனுக்குப் பாஸ்வெல் போல, அவரது வரலாற்றை வடித்து வழங்குகிறார். பண்டித மணிக்கு வ.சுப.மா. விழா எடுத்ததுபோல, வ.சுப.மா.க்கு விழா எடுக்க, அறக்கட்டளை நிறுவ இவர் முயற்சிகள் செய்கிறார். வ.சுப.மா. நூல்கள் அனைத்தையும் வெளியிட்டுள்ளார். பொய் சொல்லாத மாணிக்கனாரை வழி காட்டியாகக் கொண்டுள்ளார். சொல்லிலும் செயலிலும் அவரைப் பின்பற்றுகிறார். இயல்பாக வாழ வேண்டும்; எதிலும் மிகை வாழ்க்கை கூடாது. மொழிப்பணி முதன்மைப் பணி என்பதே அவரது நோக்கம். திருக்குறளே வாழ்க்கை நெறிகாட்டும் நூல். திருவாசகமே அன்பு நெறிதரும் நூல். அறிவு, தெளிவு, செம்மை, சான்றாண்மை வ.சுப.மா. வின் வடிவங்கள். நிகழ்காலத்திற்கும், எதிர்காலத்திற்கும் அவர்தம் கொள்கைகளைப்பரப்புதல், அவர் புகழ் பரப்புதல் இவர்தம் பணியாகும். செயல், செயல், செயல் செம்மலின் வாழ்க்கைப்

பகுதி. அதனை வள்ளுவத்தின் அடிப்படையாக வலியுறுத்துவார். அவர்தம் நெறியில் நிற்றல் இவரது கடமைகளுள் ஒன்றாகும்.

தமிழ் நாடு முழுதும் அறிந்தவர்:

"தமிழ் முழுதும் அறிதல்" எனும் வழக்கு உள்ளது. இராகுல சாங்கிருத்யாயர் இந்தியா முழுதும் வலம் வந்தவர். மெய்யப்பனார் தமிழக முழுதும் வலம் வந்தவர். தமிழ் நாட்டின் ஒவ்வொரு ஊரின் ஆறும் மலையும் மட்டுமல்ல; மேடும் பள்ளமும் காடும் கழனியும் பள்ளியும் சந்தையும் மன்றமும் நன்கறிந்தவர். நாடும் நகரமும் அறிந்தவர். ஒவ்வொரு பயணத்திலும் மனத்தில் ஒவ்வொன்றையும் பதிவு செய்து கொள்வார். வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகில் ஒவ்வொரு சிற்றூரின் வரைபடமும் இவர் மனத்தகத்ததே. வாழ்விழந்து வரும் ஊர்கள், வளம் சிறக்கும் கிராமங்கள், பெருகிவரும் நகரங்கள், மக்கள் வாழ்க்கை, நடை, உடை, பாவனை, மொழி நன்கு அறிந்தவர். ஓர் ஊர்ப்பெயரைச் சொன்னால் அதன் ஐந்து கல்லுக்குள் உள்ள மற்றொரு ஊரின் அண்மையைச் சுட்டி விடுவார். சுருக்கமாகக் கூறின் ஊர் சுற்றிப் பரந்த விரிந்த அனுபவங்களையும், தமிழ் மண்ணின் மணத்தினையும், தமிழ் மனங்களின் வெப்பதட்பங்களையும் விரல் நுனியில் வைத்திருக்கும் அறிஞர். பயணம் இவருக்கு மகிழ்ச்சி தருவது. காலையில் எழும்போது இரவில் எங்கு தங்குவது என்பதைத் திட்டமிட்டு விடுவார்.

'யாதுமூரே யாவருங் கேளிர்' என்பது இவரைப் பொறுத்தமட்டில் பொன்மொழியல்ல; நாளும் இவர், நடைமுறையில் பின்பற்றுவது. மண்ணை, மக்களை மொழியை, நாகரிகத்தைப் புரிந்துகொள்வதற்குப் பயணம் பயன்படுகின்றது. நாற்பது ஆண்டுகளாகத் தமிழக முழுதும் உலாவிய இவர், தமிழ் உலாத் திட்டத்தையும் வைத்துள்ளார். இத்திட்டத்தின் நோக்கம் தமிழ்நாட்டைத்

தெரிந்து கொள்ளல்; தமிழரைப் புரிந்து கொள்ளல்; தமிழகச் சாதனையாளர்களைப் பாராட்டல். நடந்து நாடெல்லாம் உறவாகக் கொண்டவர். படுத்தால் பாயும் பகை என்பார்.

பெருந்திட்டங்கள்

எதனையும் பெரிய அளவில் செய்வதில் நாட்டமுடையவர். சிறிய அமைப்புக்கள் பல பல்லாண்டு செய்யும் பணியைப் பெரிய அமைப்புக்கள் சில ஆண்டுகள் செய்து பெரும்பயனை விளைவிப்பதைக் கண்கூடாகக் கண்டவர். திருக்குறள் மூலம் இலட்சம் பிரதிகள், வெற்றி வழிபாட்டு மலர் ஐம்பதினாயிரம், வெற்றிச் சிந்தனைகள் இலட்சம் படிகள் எனப் பெரிய அளவிலும்

நாவல் வளர்ச்சி
இந்திய வேளாண்மை
இந்திய அரசியலமைப்பு
இந்திய தொழில் வளம்
தமிழ் மொழி வரலாறு
நாட்டுப்புறவியல் ஆய்வு
தமிழ் தொகுப்புக் களஞ்சியம்

ஒவ்வொரு நூலும் 600-லிருந்து 800 பக்க அளவில் பெரிய அளவில் வெளியிட்ட சாதனையாளர். திருக்கோயில் வரிசையில் நாற்பது நூல்கள், உலக வரிசையில் பத்து நூல்கள் எனப் பெருந்திட்டம் வகுத்து வெளியிட்டார். இலக்கிய விழாக்கள், நூல் வெளியீடு, பாராட்டு விழாக்கள் எதனையும் பெரியஅளவில் திட்டமிட்டுச் சீரோடும் சிறப்போடும் நடத்தி, விழாவுக்கு வலிவும் பொலிவும் சேர்ப்பவர். வருங் காலத்தில் நிறைவேற்றவேண்டிய இருபது பெருந்திட்டங் களையும் வகுத்து வைத்துள்ளார்.

இவர் ஒரு நிறுவனம் (He is an Institution)

பதிப்பாளர் போற்றும் பதிப்பாளர்,
செல்வர் மதிக்கும் செல்வர்,
ஆசிரியர் போற்றும் பேராசிரியர்
சான்றோர் மதிக்கும் சான்றோர்
தானும் வளர்ந்து பலரை வளர்ப்பவர்
புத்தகப் பணியால், பதிப்புப் பணியால்,
பல்கலைக்கழகப் பணியால், பல்துறைப்
பணியால் **இவரை ஒரு நிறுவனம்** என்றே
கூறலாம். இந்த ஆலமரத்தின் விழுதுகள்
தமிழக முழுதும் பரவியுள்ளன. இந்த
நிறுவனத்தின் ஒளி தமிழ் கூறு நல்லுலகம்
முழுதும் வீசுகிறது.

—டாக்டர் சு. சக்திவேல்.

ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், அறிஞர்கள், பெரு மக்கள், துணைவேந்தர்கள் முதலியோருடன் அடிக்கடி நேரடியாகவும், மடல்கள் மூலமும் இடையறாது தொடர்பு கொள்வதே தம் வெற்றிக்குக் காரணமென்று இவர் கருதுகிறார் (Continuous Contact and Communication) முன்னேற்றத்திற்கு மூன்று C என்று கூறுவார்.

பன்னிரண்டு நூல்களின் ஆசிரியராகத் திகழும் இவர் எழுதிய தாகூர் தமிழக அரசின் முதல் பரிசினைப் பெற்றது. தில்லைத் திருக்கோயில் பற்றி இவர் எழுதிய நூல் மிகச்சிறந்த பதிப்பாக அமைந்துள்ளது. ஆங்கிலத்திலும் இந்தியிலும் மொழிபெயர்க்கப் பெற்றுப் பல்லாயிரக் கணக்கான படிகள் அச்சிடப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்திய அரசு உணவுக் கொள்கை, மொழிக்கொள்கை முதலியவற்றை உருவாக்கிய வகையில் புத்தகக்கொள்கை ஒன்றினை உருவாக்கத் தேசிய அளவில் அறிஞர் குழுவை அமைத்தது.அதில் தமிழ்மொழியின் பிரதிநிதியாக இருந்து

தேசியக் கொள்கை (National Book Policy) உருவாக்கு வதற்குப் பெருந்தொண்டு செய்த பெருமையர்.

தேனீபோல் உழைத்துப் பம்பரம் போல் சுழன்று செயற்படும் சுறுசுறுப்பாளர். எல்லோரும்: நல்ல எழுத் தாளராதல் வேண்டும் எனும் நல்லிதயமும் தக்கோரைத் தூண்டி எழுதச் செய்தும் பலரை எழுத்தாளராக அறி முகப்படுத்தியும் செயற்படும் சிந்தையர். திறம் கண்டு ஆக்கமும் ஊக்கமும் தரும் பரந்த நெஞ்சினர். அரிய நூலகம் வைத்துள்ளார். வாழ்க்கை வரலாறு மட்டுமே 1000 இருக்கும். பதிப்பாளர்களிடையே ஒற்றுமைஉறவு உருவாக்கும் உழுவலன்பர். ஏனோதானோ என வெளி யிடாது எல்லாம் திருத்திய செம்பதிப்புக்களாக வெளி யிடும்வளமையர். எனவேதான் வ.சுப. மாணிக்கனாரும் ஊரன் அடிகளாரும் கம்பன் அடிப்பொடியும் இதுதொழில் அல்ல தொண்டு என்றேத்தியுளர்.

பத்தாயிரத்துக்கு மேற்பட்ட அரிய நூல்கள் அமைந்த மிகச்சிறந்த நூலகத்தை நாளும் பயன்படுத்துபவர்.

—மது.ச. விமலானந்தம்.

இவரை அறியாத எழுத்தாளர் இருக்க முடியாது இவர் அறியாத நூலும் வெளிவந்திருக்காது. இவரால் உருவாக்கப் பெற்ற புதிய எழுத்தாளர் பலர். கேள்விச் செல்வம் இவருக்கென அமைந்த தமிழ்ச் செல்வம் உண்மை, உழைப்பு, தொண்டு இவையே இவரின் வெற்றிக்கு வழிகள். தமிழ் இலக்கியச் சோலையில் பல்லாயிரம் பூக்கள் மலர்ந்து எங்கும் மணம்பரப்ப வேண்டு மென்பது இவர் அவா. திறனாய்வில் இவர் தராசுக்கோல்

— டாக்டர் சோ.ந.கந்தசாமி

தமிழகம் முழுமையும் சுற்றிய கால்கள்; வெளிவந்த அனைத்து நூல்களையும் பார்த்த கண்கள், எதையும் ஒளிக்காமல் திறந்து பேசும்இதயம்; வளரும் தமிழுக்கு

வாழ்வளிக்கத் துடிக்கும் உள்ளம்; முந்நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்த அறிவுச் செம்மை; எழுத்தாளனுக்குத் தடங்காட்டும் ஒளிவிளக்கு; பொய்ம்மைக்குப் போர்க்குரல்; மெய்மைக்கு வாழ்த்தொலி; ஆம் இவ்வளவும் சேர்ந்த தமிழுருவத்தின் பெயர் ச.மெய்யப்பன்.

—சோம. இளவரசு

என் நாற்பத்தையாண்டுக் கால எழுத்துத் தொகுதிகளை மறித்து நோக்கி, ஓரினப் பதிப்புக்களாகக் கொண்டு வரும் வாய்ப்பினை மணிவாசகர் பதிப்பகம் எனக்கு வழங்கியுள்ளது. எந்தப் பதிப்பகத்தாரிடமிருந்தும்யாருக்கும் கிட்டாத இனிய வாய்ப்பினை நான் பெறுகின்றேன். இஃது அறிவறிந்த பேறன்றோ!

மணிவாசகர் பதிப்பகம் மொழித்தரமும் அறிவுத்தரமும் வாசகர் தரமும் உயர்தற் பொருட்டு, நன்னடை நூல்களையும் ஆழ்ந்தகன்ற நூல்களையும் வழிகாட்டும் நூல்களையும் வருவாய் நோக்கின்றி வெளியிடும் துணிவுடைப் பதிப்பகம். பதிப்பகங்கள் எழுத்தாளரின் தாயகங்கள். ஆதலின் என் நூல்கள் மணிவாசகர் பதிப்பகத்தின் கருவறையிலிருந்து வெளிவருவதை நன்றியொடு மதிக்கின்றேன், வாழ்த்தொடு மகிழ்கின்றேன். புதிய தமிழுக்கு ஆக்கமும் நல்ல நூலாளர்க்கு ஊக்கமும் வழங்கி, மொழித் தொண்டாற்றி முன்னணியில் நிற்கும் மணிவாசகர் நூலகம் இலக்கண வரலாறுபோலும் தகுதி வாய்ந்த நூல் வரிசைகளைத் தொடர்ந்து பதிப்பித்துப் பல் புகழ் பெறுக என வாழ்த்துகின்றேன்.

மூதறிஞர் வ.சுப.மாணிக்கம்.

காசுக்கணக்கு மட்டும்பாராது. கருத்துச் செறிவு மிகுந்த நூல்களை தரமான - நூல்கள் முறையான விலை என்ற சமண மரபு ஒழுக்கச் செயற்பாட்டு மணிவாசகர் பதிப்பக உறுதுணையாளர் பேராசிரியர் டாக்டர்.

ச.மெய்யப்பன் அவர்கள் தாமே முன்வந்து பெருஞ் செலவில் வெளியிடும் முனைப்புக்கு மனம் கனிந்த நன்றி.

—வே.தில்லைநாயகம்
முன்னாள் நூலக இயக்குநர்

திட்டம்! திட்டம்! திட்டத்தின் வடிவர் மெய்யப்பர்! 'சுறுசுறுப்பு' என்று எழுதிக்காட்ட வேண்டிய இடங்களில் 'மெய்யப்பர்' படத்தைப் போட்டுவிடலாம்! பம்பரச் சுழற்சி அவர்க்கு இயல்பாகிவிட்ட நேர்ச்சி! அச்சுழற்சி, தமிழ் வளமாகக் கொழித்தலைக் கண்டு மகிழும் நேய நெஞ்சால் நன்றியுரைத்தல் என் தலைக்கடனாம்.

இவ்விலக்கண வரலாற்றை எழுதத்தூண்டியவர் பேரா. மெய்யப்பனார். அவர்தம் ஆர்வம் பெரிது. அவ்வார்வம் போலவே அன்பும் நன்பும் பெரிது. அவற்றைப் போலவே எறும்பும் சுரும்பும் தோற்கும் சுறுசுறுப்பும் பெரிது. இன்ன வெல்லாம் வாழ்வியலுக்கு வளக்கொடைகள்.

இக்கொடைகளைப் பெற்ற ஒருவர் தமிழ்கூறு நல் லுகக் கொடையாக இந்நூலை வழங்குகின்றார். இக் கொடைக்கு எளியேன் ஒரு பொருளாக இருந்தமை அன்னைத் தமிழின் கொடையே என்பதை நினைந்து உருகுவதல்லால் ஒன்றறியேன். அவர் வாழி! அவர்தம் அருந்தமிழ்த் தொண்டு வாழி!

"கையைக்கடித்தாலும், மெய்யாக நலஞ்சேர்ப்பது மேதக்க கருவிநூலே" எனக் கொண்டு வெளியிட்டு வரும் பதிப்புச்செல்வர்-பதிப்பாலே மொழி வரலாற்றில் தம்மைப் பதித்துக் கொண்டு வரும் பதிப்புச் செல்வர் பேராசிரியர் மெய்யப்பர் தமிழறிஞர்-தமிழார்வலர்-பாராட்டுக்குரியர். பழுத்தபழமாம் தாமரைச் செல்வர் - மேனாள் கழக முதல்வர் வ.சுப்பையா அவர்களின் வழிநலம் பாராட்டிக் கருவி நூல்களை வெளியிட்டு வரும் இளவல் மெய்யப்பர் தொண்டு இனிது சிறப்பதாக!

—இரா.இளங்குமரன்

தொட்டதெல்லாம் பொன்னாக்கும் தொழில் முதல்வர் வித்தகத்தின் மொத்த உரு. எங்கும் வெற்றி எதிலும் வெற்றி, எடுத்த காரியம் யாவினும் வெற்றி என்ற புகழ்ப் பாட்டிற்குரிய வெற்றிச் செல்வர் திருமிகு ச.மெய்யப்பனார் அவர்கள் என்பேராசிரியர். மாணவப் பருவத்திலேயே என்னிடம் அக்கறையும் ஆர்வமும் கொண்டவர்கள். அவரவர் தகுதியறிந்து பணிகொள்ளும் தமிழ் நலம் சான்றவர்.

—டாக்டர்.பழ.முத்துவீரப்பன்.

வாழ்த்து

செய்ய தமிழேபோல் தென்றற் பொதியம்போல்
மெயயன் திருவருளால் மேன்மைபெற்ற-மெய்யப்பன்
பன்னூலும் நன்கு பதிப்பித்துச் சீர்பெற்று
எந்நாளும் வாழ்க இனிது.

—கலைமகள் ஆசிரியர் கி.வா.சகந்நாதன்

பதிப்பாளும் செம்மலான் பல்கலைதேர் வள்ளலான்
பல்லோர் நண்பன்
மதிப்பாளும் நிறுவனத்தான் வளர்தமிழின்
கரையனையான் மடிமை யில்லான்
குதித்தாளும் பெருமான்தன் குனித்தவடி
மனத்தகத்தான் குறிக்கோள் மிக்கான்
உதித்தாளும் ஞாயிறுபோல் ஒளிசிறந்து மெய்யப்பன்
உயர்ந்து வாழி!

—மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார்

ஞாலத்தை உறவாக மதிக்கும் நெஞ்சர்

காலத்தைப்பொன்போலப் போற்றும் நல்லார்!
கடமையினைக் கண்போலச் செய்யும் சீரார்!
சீலத்தை உயிராக ஓம்பும் தொண்டர்!
சிவநெறியே பெருநெறியாய்க் கொள்ளும் பக்தர்!
ஞாலத்தை உறவாக மதிக்கும் நெஞ்சர்!
ஞானத்தைப் பட்டறிவால் பெற்ற செம்மல்!
கோலத்தை எண்ணாமல் குணமே எண்ணும்
கொள்கையினார் மெய்யப்பன் நீடுவாழி!
மாணிக்கச் சான்றோர்கள் மதித்து வாழ்த்தும்
மாதவத்தைப் பெரும்பேறாய்ப் பெற்றார்! நல்ல
ஆணிப்பொன் முத்தெனவே பாடஞ் சொல்லும்
ஆசிரியச் சான்றோராய் விளங்குகின்றார்!
ஏணியைப்போல் இருந்துதவி எழுது வோர்கள்
ஏற்றமுற நற்பணிகள் இயல்பாய்ச் செய்வார்!
காணிக்கை எனத்தமிழ்த்தாய் தந்த நண்பர்!
காட்சிக்கே எளியராக வாழும் அன்பர்!
மெய்யப்பன்! பதிப்புலகில் நாடே போற்றும்
மேலப்பன்! எழுத்துலக இளைஞர் கட்கோ
செய்யப்பன்! செந்தமிழைக் காக்கும் போதோ
சேயப்பன்! தோழர்களுக் குதவும் சால்பில்
கையப்பன்! கருணையினால் எளியர் வாழ்த்தும்
காரப்பன்! கடவுளிடம் காட்டும் அன்பால்
நெய்யப்பன்! ஒழுக்கநெறி பேணும் பண்பால்
நேரப்பன்! புகழ்நிறைய நீடுவாழி!

சோம. இளவரசு